**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**-----------**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | O.S.No.202/2019 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | வா.சா.1.திருமதி. மகேஸ்வரி க.பெ.முருகேசன் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 13th day of September 2024

13.09.2024

O.S.No.202/2019

வா.சா.1.திருமதி. மகேஸ்வரி க.பெ.முருகேசன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மதுரை வடக்கு தாலுகா வட்டாட்சியர் அவர்களுக்காக அழைப்பாணையின் பேரில் அவர் எனக்கு அளித்த எழுத்துபூர்வ அதிகார கடிதத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த எழுத்து பூர்வ அதிகார கடிதம் நீ.மா.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறுதூர் கிராம யுடிஆருக்கு முந்தைய சர்வே எண்.169/1 மற்றும் 169/2 ஆகியவை இல்லை. சர்வே எண்.169 மட்டும் தான் இருந்தது. மேற்படி சர்வே எண்.169ல் யுடிஆருக்கு முன்பு மொத்த விஸ்தீரணம் 2 ஹெக்டேர் 80.5 ஏர்ஸ் விஸ்தீரணம் இருந்தது. யுடிஆருக்கு பின்பு அதற்கு நிகரான சர்வே எண்.28 ஆகும். யுடிஆருக்கு பின்பு பட்டா வழங்கப்படும்போது சர்வே எண்.169 என்ற எண்ணை குறிப்பிடாமல் அப்போதைய சர்வே எண்.28ஐ மட்டும்தான் நாங்கள் குறிப்பிடுவோம். "அ" பதிவேடு சம்பந்தபட்ட நிலம் என்ன வகையான நிலம் என்ற வகைப்பாட்டினை காண்பிக்கும் ஆவணம். தற்போது சிறுதூர் கிராம சர்வே எண்.28 பல உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக பட்டா வழங்கப்படும் போது கிரையம் பெற்ற நபர் அந்த சொத்திற்கான மூல ஆவணங்கள் மற்றும அவரது கிரைய ஆவணம் சமர்ப்பித்தால் போதும், அவரை விசாரித்து பட்டா வழங்கப்படும், அவருக்கு கிரையம் கொடுத்த நபரை விசாரித்து பட்டா வழங்குவது வழக்கம் இல்லை. பட்டா வழங்கும் முன்பு புல தணிக்கை செய்து பட்டா வழங்குவோம். நேரடியாக புல தணிக்கை செய்யப்பட்ட பின்பு அளவீடுகள் சரியாக இருந்தால் அத் னஅடிப்படையில் பட்டா வழங்கப்படும்.

குறுக்கு விசாரணை

1. நான் தலைமை நில அளவராக உள்ளேன். நான் மதுரை வடக்கு வட்டாட்சியருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.169 மொத்த விஸதீரணமும் ஆரம்பத்தில் இஎம்ஜி சௌந்திரராஜன், வானமாலை, கார்மேகம் ஆகியோர்கள் பெயரில் யுடிஆர் A Register-ல் உள்ளது. சர்வே எண்.169 என்பது சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆக உட்பிரிவுசெய்யப்பட்டிருநது என்றால் சரியல்ல. சர்வே எண்.169 யுடிஆருக்கு பின்பு சர்வே எண்.28 ஆக உள்ளது. UDRசர்வே எண்.28 ஆரம்பத்தில் இஎம்ஜி சௌந்திரராஜன், வானமாலை, கார்மேகம் ஆகியோர்கள் பெயரில் இருந்தது. யுடிஆர் சர்வே 1986-1987 ஆண்டுகளில் நடைபெற்றது. பொதுவாக பட்டா மாற்றம் செய்யப்படவேண்டும் என்றால் அந்த சொத்திற்கான மூல ஆவணங்களை மனுவுடன் இணைத்து மனு தாக்கல் செய்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த மனுவின் பேரில் உரிய நபருக்கு அறிவிப்பு அனுப்பி விசாரணை நடைபெற்றுதான் பட்டா மாறுதல் செய்யப்படும் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு தரப்பினர்கள் தாவாசொத்தினை பொறுத்து பட்டா மாறுதல் செய்யப்பட வேண்டும் என்றால் மனு கொடுத்து அதன் பேரில் விசாரணை நடைபெற்றபின்புதான் பட்டா மாறுதல்

செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த மனு சம்பந்தமாக RDR கோப்புகளை இந்த வழகைில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த பிரதிவாதி தரப்பினர்களை எனக்கு தெரியுமா என்றால் நான் ஊருக்கு புதியவர் என்பதால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தரப்பினருக்கு அறிவிப்பு அனுப்பி விசாரித்த பின்பு இந்த வழக்கு தரப்பினருக்கு பட்டா வழங்கியதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து குறித்து யாருக்கும் பட்டா வழங்கக்கூடாது என தாவா வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து பள்ளி மைதானமாகவும். பள்ளி விடுதியாகவும், இருந்து வருவதாகவும் அதனை அளந்து அத்துமால் செய்ய வேண்டும் எனவும் யாருக்கும் அந்த சொத்தினை பொறுத்து பட்டா வழங்கக்கூடாது என 2ம் பிரதிவாதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளைவில் ரிட் மனு எண்.1765/2014 தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான்.

3. அந்த மனுவில் நீதிமன்ற ஆணையரை நியமித்து அளந்து, அத்துமால் செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்படி அளவீடுசெய்த விவரத்தினை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவத்தினை பார்த்து மணிகண்டன் என்ற நில அளவையர் செய்தார் என்பதனை தெரிந்துகொண்டேன். தாவா சொத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் காலிகிரவுண்டாக உள்ளதாக நான் கேட்டு தெரிந்து கொண்டேன். தாவாசொத்து மனையிடமாக இல்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தினை பொறுத்து பட்டா மாற்றம் செய்யப்படும் போது புல தணிக்கை செய்து அளவீடு சரிபார்த்து பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். தாவா சொத்தினை பொறுத்து புல தணிக்கை செய்ததாக எங்கள் தரப்பில் எந்த அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு புல தணிக்கை செய்வது சம்பந்தமாக அறிவிப்ப எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்து பிரதிவாதி பள்ளி விளையாட்டு மைதானமாகவும், பள்ளி விடுதியாகவும் உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பட்டா மாறுதல் செய்வதற்கு மனுவுடன் கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படும்போது அந்த ஆவணங்களின் உண்மை தன்மையை சரிபார்த்துதான் ஆவணங்கள் வழங்கப்படும் என்றால் உண்மை தன்மை சரிபார்க்கபடாது, ஆவணங்களின் அடிப்டையில் பட்டா மாறுதல் செய்யப்படும். அந்த ஆவணத்தினை எழுதிக் கொடுத்தவருக்கு உரிமை இருக்கின்றனவா என்று சரிபார்த்துதான் பட்டா மாறுதல் செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு இந்த வழக்கில் பட்டா மாறுதல் மனு கொடுத்த மனுதாரருககு தாவா சொத்தில் உரிமை உள்ளதா என்பதனையும், அவருக்கு கிரையம் கொடுத்தவருக்கு உரிமை உள்ளதா என்பதனையும் சரி பார்த்து விசாரணை செய்து பட்டா மாறுதல் செய்ததாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு தரப்பினர்கள் பட்டா மாறுதல் செய்த போது எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். எந்த

தேதியில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த சமயத்தில் பட்டா மாறுதல் செய்த நபரை விசாரித்ததால் உண்மை தன்மைதெரிய வரும் என்றால் சரிதான்.

5. தாவா சொத்து பிரதிவாதிகள் தரப்பினருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்தும் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்யாமல்பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுககாமல் எவ்வித விசாரணையும் இன்றி தன்னிச்சையாக வழக்கு தரப்பினர்களுக்கு பட்டா வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் தாவா சொத்து சம்பந்தமான சர்வே எண்.28 அதன் பழைய சர்வே எண்.169 சம்பந்தபட்ட சொத்து இளம்ஜி சௌந்திராஜன் பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் முழு சொத்திற்கும் அவரதுபெயரில் இல்லை, 1 ஹெக்டேர் 68 ஏர்ஸ் என்பது இளம்ஜி சௌந்திராஜன் வகையறா பெயரில் சர்வே எண்.28/1A1A1 ல் கட்டுப்பட்டுள்ளது. வழககு தரப்பினர்களின் ஆவணத்தினை நான் பார்த்தில்லை என்றால் சரிதான். வாதியின் கிரைய ஆவணத்தினை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதை பற்றி தெரிந்தால்தான் அது சம்பந்தமாக எனக்கு சாட்சியம் அளிக்க தெரியும் என்றால் சரிதான். சிறுதூர் கிராம சர்வே எண்.169 என்பது சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2 என உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு உட்பிரிவு செய்யப்படவில்லை. பட்டா மாறுதல் சம்பந்தமாகவும், தாவாசொத்து சம்பந்தமான உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு எதுவும்தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.